# <u>செய்தி வெளியீடு</u>

**செய்தி வெளியீடு எண்.75/2024** **நாள்: 19.10.2024**

**16.10.2024, 17.10.2024 மற்றும் 18.10.2024 ஆகிய மூன்று நாட்களில் 24 மணி நேரமும் இயங்கிய 356 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் 2616.28 மில்லியன் லிட்டர் (அதாவது மூன்று மடங்கு அதிகமான நீர்) சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளது.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் மழைநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 356 கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் 22 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 668 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர் வெளியேற்றப்பட்ட வந்த நிலையில் 16.10.2024 அன்று நாளொன்றுக்கு 936.56 மில்லியன் லிட்டர், 17.10.2024 அன்று 841.02 மில்லியன் லிட்டர் மற்றும் 18.10.2024 அன்று 838.52 மில்லியன் லிட்டர் ஆகிய மூன்று நாட்களில் 2616.28 மில்லியன் லிட்டர் (அதாவது மூன்று மடங்கு அதிகமான நீர்) சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட 1 முதல் 15 மண்டலங்களில் கழிவுநீர் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்வதற்காக 16.10.2024, 17.10.2024 மற்றும் 18.10.2024 ஆகிய மூன்று நாட்களில் 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 225 ஜெட்ராடிங் வாகனங்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கபட்ட 90 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 687 கழிவுநீரகற்றும் வாகனங்களை கொண்டு 24 மணி நேரமும் 683 தெருக்களில் உள்ள 2436 இயந்திர நுழைவாயில்களில் 62770 மீட்டர் தூர்வாரும் பணிகள் மற்றும் கழிவுநீர் குழாய்கள் தூய்மை படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், 1 முதல் 15 மண்டலங்களில் கடந்த மூன்று நாட்களில் நீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ள 1886 களப்பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in